

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜனவரி 02, 2020 | புரட்சி 18 | முழக்கம் 51 | விலை: ரூ.3.00

## திராவிடர் விடுதலைக் கழகச் செயலவை அறைகூவல்

# பா.ஜ.க.வின் ‘இந்துராஷ்டிரம்’ அமைக்கும் முயற்சிகளை முறியடிக்க மக்களை ஒன்று திரட்டுவோம்

*பா.ஜ.க.வின் ‘இந்துராஷ்டிரம்’ அமைக்கும் முயற்சியைத் தடுக்க மக்கள் சக்தியை அணி திரட்டுவோம் என்று திராவிடர் விடுதலைக் கழக செயலவை அறைகூவல் விடுத்துள்ளது. நாடு இராணுவ ஆட்சியை நோக்கி நகரும் ஆபத்தையும் செயலவை எச்சரித்துள்ளது.*

*திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயலவையில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:*

இந்தியாவின் மதச் சார்பற்ற அடையாளத்தை உருக்குலைத்து ‘இந்து இராஷ்டிரமாக்கும்’ முயற்சிகளை பா.ஜ.க. நடுவண் ஆட்சி தீவிரப்படுத்தி வருகிறது. இதற்கான வழிகாட்டும் அதிகாரங்களை ஆர்.எஸ்.எஸ். கையில் எடுத்துக் கொண்டுள்ளது. மெஜாரிட்டி மக்களாக இந்துக்களைக் கொண்ட ஒரு நாடு இந்து நாடாகவே இருக்க வேண்டும் என்று சங்பரிவாரங்கள், பா.ஜ.க. முன் வைக்கும் கருத்துகளின் உள்ளடக்கம் மிக மிக ஆபத்தானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ‘மெஜாரிட்டி இந்துக்கள்’ போர்வைக்குள் மைனாரிட்டி பார்ப்பனர்கள் புகுந்து கொண்டு மெஜாரிட்டி இந்துக்களின் பண்பாடு, உணவு, பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகளை சிதைத்து, பார்ப்பன சமஸ்கிருதப் பண்பாடே மெஜாரிட்டி இந்து பண்பாடு என்ற பொய்யான தோற்றத்தை உருவாக்கிக் காட்டுகிறார்கள்.

இந்து என்ற அடையாளத்தோடு பிரிக்க முடியாமல் ஒட்டி நிற்கும் ஜாதி - அதன் பெயரில் நிகழும் சமூக ஒடுக்குமுறைகளை இந்துக்கள் அணி திரட்டல் வழியாக உறுதிப்படுத்திக் கொள்வதே பார்ப்பனர் பேசும் இந்துத்துவாவில் அடங்கியுள்ள ஆபத்து என்பதை இந்துமதத்தில் நம்பிக்கையுள்ள பெரும்பாலான பார்ப்பனரல்லாத மக்கள் உணர்ந்திட வேண்டும் என்பதோடு, இந்த ஆபத்தை மதச்சார்பற்ற முற்போக்கு இயக்கங்கள், கட்சிகள், மக்களிடையே எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என்றும் திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது. இந்த ஆபத்தான பார்ப்பன இராஜ்யத்தை உருவாக்கும் திட்டத்துக்கு அரசியல் அதிகாரங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன. அரசியல் சட்டத்தின் அடிப்படைகள் தகர்க்கப்படுகின்றன. அதற்கு இசைவாக நீதிமன்றம், நிர்வாகம், நாடாளுமன்றம் என்ற அமைப்புகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் படிப்படியாக கொண்டு வரப்படுகின்றன.




இராணுவத்தின் தளபதி ஜெனரல் பிபின்ராவத் - இது வரை பின்பற்றப்பட்ட மரபுகளுக்கு எதிராக குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்தும், அசாம் மக்களின் போராட்டம், காஷ்மீர் பிரச்சினைகளில் நடக்கும் போராட்டங்களுக்கு எதிராகவும் அரசியல் கருத்துகளை முன் வைத்திருப்பது நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. முன்னாள் இராணுவ தளபதியாக இருந்த வி.கே. சிங் இப்போது பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் மத்திய அமைச்சரவையில் இணை அமைச்சராக்கப்பட்டுள்ளார் (சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர்). அவர் இராணுவ தளபதி ராவத்தின் பேச்சை வரவேற்றிருக்கிறார். முப்படைக்கான தனித்தனி தளபதி பதவிகளை ஒழித்து ஒரே இராணுவ தளபதி பதவியின் கீழ் முப்படைகளையும் கொண்டு வர அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த செயல்பாடுகள் எல்லாம் இந்தியாவில் ஜனநாயக ஆட்சி முறையை முடிவுக்குக் கொண்டு வந்து இராணுவ ஆட்சி வழியாக ‘இந்து இராஷ்டிரம்’ அமைக்கும் முயற்சிகள் நடக்கிறதோ என்ற

(4ஆம் பக்கம்)

## கழக செயல்பாடுகளை தீவிரப்படுத்த தோழர்கள் உறுதி

***கழக செயலவைக் கூட்டத்தில் பேசிய கழகப் பொறுப்பாளர்கள், 2020ஆம் ஆண்டில் செயல்பாடுகளை மேலும் தீவிரப்படுத்துவோம் என்று அறிவித்தனர்.***

திராவிடர் விடுதலைக் கழக செயலவை, சென்னை இராயப்பேட்டை விஜய் திருமண மண்டபத்தில் டிசம்பர் 28, 2019 அன்று காலை 10.30 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடியது. தென்சென்னை மாவட்டக் கழக அமைப்பாளர் மயிலை சுகுமார், கடவுள், ஆத்மா மறுப்பு முழக்கங்களைக் கூறினார். அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தொடக்க உரையாற்றினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத்தின் கடந்தகால செயல்பாடுகள் – பெரியாரியலை எதிர்நோக்கும் ஆபத்துகள், கழக அமைப்புகள் முனைப்போடு செயல்பட வேண்டிய தேவை, அடுத்து மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டங்கள் குறித்து தலைமைக் குழுவில் நடந்த விவாதங்கள், கழக ஏடுகளான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ குறித்த வரவு செலவு கணக்குகளை விளக்கி ஒரு மணி நேரம் பேசினார். தொடர்ந்து கழகத் தோழர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

கருத்துகளைத் தெரிவித்த தோழர்கள் : அன்பு தனசேகரன் (தலைமைக் குழு உறுப்பினர்), தலைமைக் கழக செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, ராஜீ (வடசென்னை மாவட்ட செயலாளர்) ஆகியோர் உரையைத் தொடர்ந்து இணையதள பொறுப்பாளர் விஜயராகவன், இணையதளத்தின் வழியாக எளிமையாக படிக்கக்கூடிய பெரியார், அம்தே;கர் தொகுப்புகள், குடிஅரசு தொகுப்புகள், கழக நிகழ்வுகள் குறித்த பதிவுகள், இணையதளத்தில் மின்னஞ்சல் நூல்களாக ஏற்றப்பட்ட கழக வெளியீடுகள், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ பதிவுகள், ‘அமேசான் கிண்டில்’ வழியாக தரவிறக்கம் செய்து படிக்க பதிவேற்றப்பட்ட நூல்கள், பெரியார் செயலி (ஆப்ஸ்) அதைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து திரைக்காட்சிகள் வழியாக விரிவாக விளக்கினார்.

பிற்பகல் 2.30 மணிக்கு அனைவருக்கும் பிரியாணி உணவு வழங்கப்பட்டது. 3.30 மணிக்கு மீண்டும் செயலவை கூடியது. தெள்ளமுது (காஞ்சிபுரம்), பரிமளராசன் (முகநூல் பொறுப்பாளர்), இளையரசன் (விழுப்புரம்), மதன்குமார் (கடலூர்), டேவிட் (சேலம் கிழக்கு), மேட்டூர் கோவிந்தராஜ் (சேலம் மேற்கு), முகில்ராசு (திருப்பூர்), சங்கீதா (திருப்பூர்), வேணுகோபால் (ஈரோடு), கிருஷ்ணமூர்த்தி (ஈரோடு தெற்கு), மா.பா.மணிகண்டன் (மதுரை), வெள்ளியங்கிரி (கோவை), இராமச்சந்திரன் (மேட்டுப்பாளையம்), நிர்மல் குமார் (கோவை), சாமிநாதன் (நாமக்கல்), சந்தோஷ்குமார் (தர்மபுரி), பாரி (தஞ்சை), சென்னிமலை செல்வராஜ் (ஈரோடு), தலைமைக் குழு உறுப்பினர்கள் அய்யனார், சூலூர் பன்னீர்செல்வம், கோபி. இராம இளங்கோவன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.

குடிஅரசு வழக்கு, பேச்சாளர்களுக்கு, களப்பணியாளர்களுக்கு, பயிற்சிகள், கழக ஏடுகள் வளர்ச்சி, கழகத் தோழர்களை மாவட்டந்தோறும் சந்திக்கும் திட்டம் குறித்து விரிவாகப் பேசினார். மயிலை சுகுமார் நன்றி கூற 7 மணியளவில் செயலவை நிறைவடைந்தது. கழகச் செயல்பாடுகளை வரும் ஆண்டில் தீவிரமாக்க தோழர்கள் உறுதி அளித்தனர்.

**தலையங்கம்**

## பார்ப்பனர்கள் பெரும்பான்மை ‘இந்து’க்களின் பிரதிநிதிகளா?

*பா.ஜ.க. – சங் பரிவாரங்கள் சில மாயைகளை பொது மக்கள் சிந்தனையில் திணித்து வைத்துள்ளனர். அந்த மாயை களைத் தகர்த்து மக்களிடம் உண்மையான விளக்கங்களை நாம் புரிய வைக்க வேண்டும்.*

*இந்தியாவில் இந்துக்கள் பெரும் பான்மையாக வாழ்கிறார்கள். அப்படி யானால் நமது நாடு இந்துக்கள் நாடு தானே என்று ஒரு கேள்வி முன் வைக்கப்படுகிறது. இது நேர்மையற்ற வாதம்.*

*ஜனநாயக நாட்டில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்கள் வெற்றி பெறுகிறார்கள். இந்தியாவில் இருப்பது அத்தகைய ஜனநாயகத் தேர்தல் முறை. இது தேர்தலுக்கான ஒரு வழிமுறையே தவிர, ஜனநாயகத்துக்கான அடையாளம் அல்ல.*

*ஜனநாயகம் என்பது நாட்டில் எது பெரும்பான்மையாக இருக்கிறதோ, அதற்கான ஆட்சி நடத்த வேண்டும் என்பது அல்ல. இந்தியா சுதந்திரம் பெற்றபோது எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்தான் பெரும்பான்மை. எனவே எல்லோரையும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக வைத்திருப்பதே சுதந்திர இந்தியாவின் இலட்சியம் என்று கூற முடியுமா? மருத்துவ வசதியற்றவர்களும், வேலை இல்லாதவர் களுமே அப்போது பெரும் பான்மை. அதற்காக மருத்துவ வசதிகள் உருவாகி விடாமல் பெரும்பான்மையைக் காப்பாற்ற வேண்டும்; வேலை வாய்ப்பு இல்லாத வர்களே பெரும்பான்மையாக இருப்பதால் வேலை வாய்ப்புகளை உருவாக்கி பெரும்பான்மை மக்களுக்கு துரோகம் செய்யக் கூடாது என்று கூற முடியுமா? ஜனநாயகத்துக்கு பெரும்பான்மை வாதத்தை கொள்கையாக்குகிறவர்கள் இதற்கு பதில் கூற வேண்டும்!*

*ஜனநாயகத்தின் அடிப்படை சமத்துவம்; ஒவ்வொரு மத, இன, மொழிப் பிரிவினருக்கான உரிமைகளைப் பாதுகாப்பதே ஜனநாயகம். ஆனால் மைனாரிட்டி பார்ப்பனர்கள் இதே இந்து சமூகத்தில் ஒரு பெரும் பிரிவினரை ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’, தீண்டப்படாதவர் என்று கூறி, அதை மதத்தின் பெயரால் ஏற்றுத் தீரவேண்டும் என்று கட்டாயப் படுத்தும்போது பார்ப்பனியம் என்ற சிறுபான்மைக் கூட்டத்தின் பாசிச சிந்தனை பெரும்பான்மை மக்களை அடிமைப் படுத்துகிறது. இங்கே பாதுகாக்கப்பட வேண்டிய சிறுபான்மைப் பிரிவில் பார்ப்பனர்கள் வரவில்லை. மாறாக எதிர்க்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இது உண்மையில் சிறுபான்மை கொடுங்கோன்மை!*

*ஒரு ஜனநாயகம் அதன் மக்களுக்கான சமத்துவப் பார்வையில் (equality), பெரும் பான்மை (majority), சிறுபான்மை (minority)க்கான பெரும்பான்மை கொள்கையை உருவாக்க வேண்டுமே தவிர, மதத்தின் அடிப்படையில் அல்ல!*

*இந்த சிறுபான்மை பார்ப்பனியம் தனது வர்ணாஸ்ரமத்தை, ஜாதியை, பெரும் பான்மை மக்களுக்கான கல்வி உரிமை மறுப்பை, கடவுள் மீதான தனது அதிகாரத்தை, பெரும்பான்மை மக்கள் மீது திணித்துக் கொண்டு மக்களை ஏமாற்ற ‘பெரும்பான்மை இந்துக்கள்’ என்ற போர்வைக்குள் பதுங்கிக் கொள்கிறது.*

*அரசியலையே எடுத்துக் கொள்வோம்; பா.ஜ.க. தவிர, இந்தியாவிலுள்ள பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் பெரும்பான்மை உறுப்பினர்கள் யார்? அவர்கள் மொழியில் கூற வேண்டுமானால் ‘இந்துக்கள்தான்’ பெரும்பான்மை ‘அரசியல் கட்சி இந்துக்களின் கொள்கை’ இந்தியாவை இந்து நாடாக மாற்றிவிடக் கூடாது. இது மதச்சார்பற்ற நாடு என்பதுதான். அதற்காக பா.ஜ.க.வையும் எதிர்த்து நிற்கிறார்கள். இந்த நிலையில் பெரும்பான்மை இந்துக்களின் பிரதிநிதி என்று மார்தட்ட பா.ஜ.கவுக்கோ, பார்ப்பனர்களுக்கோ எந்த உரிமையோ, தகுதியோ எப்படி இருக்க முடியும்?*

*சமூகத்தின் அதிகாரத்தை அவர்களே அபகரிப்பதை ஒரு போதும் வெகுமக்கள் ஏற்க மாட்டார்கள். இதுதான் ‘பார்ப்பன பாசிசம்’!*

# தீவிர சிகிச்சைப் பிரிவில் இந்திய பொருளாதாரம் : பொருளாதார ஆய்வாளர் எச்சரிக்கிறார்

*இன்று நாடு எதிர்கொள்ளும் நிலையானது, ‘ஒரு சாதாரண பொருளாதார மந்தநிலை அல்ல’ என்று மத்திய அரசின்முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகரான அரவிந்த் சுப்பிரமணியன் எச்சரிக்கை செய்துள்ளார். அரவிந்த் சுப்பிரமணியன், பன்னாட்டு நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) இந்திய அலுவலக முன்னாள்தலைவர் ஜோஷ் பெல்மனுடன் இணைந்து கட்டுரை ஒன்றை கடந்த வாரம் வெளியிட்டிருந்தார். அதில், “வங்கிசாரா நிதி நிறுவனங்களில் காணப்படும் பிரச்சனைகள் உள்ளிட்டவை காரணமாக, இந்தியப் பொருளாதாரம் தீவிர சிகிச்சைப் பிரிவை நோக்கிச் செல்கிறது” என்று கூறியிருந்தார். இந்நிலையிலேயே, ‘இந்தியாவில் நிலவுவது சாதாரணமான பொருளாதார மந்த நிலை அல்ல!’ என்று மீண்டும் எச்சரித்துள்ளார்.*

*இதுதொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அரவிந்த் சுப்பிரமணியன், பேட்டி அளித்துள்ளார். அதில், மேலும் அவர் கூறியிருப்பதாவது:*

*2011 மற்றும் 2016-க்கு இடையிலான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2.5 சதவிகித புள்ளிகள் மிகையாக கணக்கிடப்பட்டுள்ளன. ஏற்றுமதி புள்ளி விவரங்கள், நுகர்வோர் பொருட்களின் புள்ளி விவரங்கள், வரி வருவாய் புள்ளி விவரங்கள்- ஆகிய நாட்டு வளர்ச்சியின் வெளிப்பாட்டை குறிப்பிடும் இந்த மதிப்பீடுகள் யாவும் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2000 மற்றும் 2002இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 4.5 சதவிகிதமாக இருந்த போதிலும் இந்த குறியீடுகள் அனைத்தும் நேர்மாறானவை அல்ல. அரசாங்க தரவுகளின் படியே இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகளில் கீழ்நோக்கிச் சென்றுள்ளது. 2019-2020 முதல்காலாண்டில் 2 சதவிகிதம் குறைந்து 4.5 சதவிகிதம் ஆகியுள்ளது. இது 2018-19 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 8 சதவிகிதமாக இருந்தது.*

*எண்ணெய் அல்லாத ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விகிதங்கள் முறையே 6 சதவிகிதம் மற்றும் 1 சதவீதமாக குறைந்துள்ளது. மூலதனப் பொருட்கள் தொழில் வளர்ச்சி 10 சதவிகிதம் குறைந்துள்ளது. நுகர்வோர் பொருட்கள் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1 சதவிகிதமாக குறைந்துள்ளது. இரண்டுஆண்டுகளுக்கு முன்பு இது 5 சதவிகிதம் வரை இருந்தது நினைவு கொள்ளத்தக்கது. உண்மையில் பொருளாதாரம் மந்தமாகிறது... வேலை வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. மக்களின் வருமானம், அவர்கள் பெறும் ஊதியங்கள் குறைந்துள்ளன. அரசு பெறும் வருவாயும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி (ரிசர்வ் வங்கி), மே மாதத்தில் நடத்திய கணக்கெடுப்பின் போதே, 48 சதவிகிதம் பேர் முந்தைய 12 மாதங்களில் பொதுபொருளாதார நிலைமை மோசமடைந்திருப்பதாக தெரிவித்திருந்தனர். எனவே, இது ஒரு சாதாரண மந்தநிலை அல்ல... இது இந்தியாவின் பெரும் மந்தநிலை என்று அரவிந்த் சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.*

# பேராவூரணியில் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம்



*பேராவூரணியில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் பெரியார் நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேராவூரணி அண்ணா சிலை அருகில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு திராவிடர் விடுதலை கழகத்தின் மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பா. பாலசுந்தரம், திராவிட முன்னேற்றக் கழகம் க. அன்பழகன், திராவிடர் கழகம் இரா. நீலகண்டன், காங்கிரஸ் கட்சி ஷேக். இப்ராஹிம், அறநெறி மக்கள் கட்சி ஜேம்ஸ், மனிதநேய ஜனநாயக கட்சி அப்துல் சலாம், திராவிடர் விடுதலைக் கழகம் நாவலரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*‘பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்’ என்ற தலைப்பில் தமிழக மக்கள் புரட்சி கழகத்தின் தலைவர் அரங்க குணசேகரன், தாளாண்மை உழவர் இயக்கத்தின் தலைவர் கோ. திருநாவுக்கரசு, கல்வியாளர்கள் கே.வி. கிருஷ்ணன், புலவர் சு போசு, தமிழக மக்கள் புரட்சி கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் ஆறு நீலகண்டன், தமிழக மக்கள் விடுதலை இயக்கம் முனைவர் ஆ. ஜீவா, மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேலுச்சாமி, காங்கிரஸ் கட்சி சாதிக் அலி, திராவிடர் விடுதலைக் கழகம் கலைச்செல்வன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.*

*திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தமிழக மக்கள் புரட்சி கழகம், திராவிட முன்னேற்ற கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி விதை நெல் இலக்கியக் கூடம், தமிழ்வழிக் கல்வி இயக்கம், அறநெறி மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, தோழமை சமூக சேவை மையம் போன்ற அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக மெய்ச்சுடர் நா.வெங்கடேசன் வரவேற்றார். நிறைவாக வீரக்குடி ராஜா நன்றி கூறினார்.*

*எங்கெல்லாம் பாசிஸம் தலை தூக்குகிறதோ அங்கெல்லாம் பெரியார் அம்பேத்கர் கொள்கைகள் நிலை நிறுத்தப்படும். சமூக நீதிக்கும், சமூக சமத்துவத்திற்கு எதிரான செயல்பாடுகளை மத்திய மாநில அரசுகள் நிறுத்திக் கொள்ளவில்லை என்றால் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தும் என்று வலியுறுத்தப்பட்டது.*




## தர்மபுரி மாவட்டக் கழக சார்பில் ரூ.35,000 கட்டமைப்பு நிதி

*கழக செயலவை யில் கழகக் கட்டமைப்பு நிதி யாக ரூ.35,000/- தர்மபுரி மாவட்டத் தலைவர் வேணுகோபால், அமைப்பாளர் சந்தோஷ் ஆகியோர் கழகத் தலைவர், பொதுச் செய லாளரிடம் வழங்கினர்.*

## பள்ளிபாளையம் மாநாட்டில் கொளத்தூர் மணி உரை

# தமிழர் வேலை வாய்ப்புகளைப் பறித்த தமிழக அரசின் ஆபத்தான சட்டத்திருத்தம்

*பள்ளிபாளையத்தில் 20.9.2019 அன்று நடந்த திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மருத்துவமனையில் இருக்கும்போது தமிழ்நாட்டின் அரசு வேலை வாய்ப்புகளை பிற மாநிலத்தவர் - பிற நாட்டினர் அபகரிக்கும் ஆபத்தான திருத்தச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்ததை கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுட்டி காட்டினார்.

இந்தியாவில் தற்போது உயர்கல்விக்குச் செல்கிறவர்கள் ( 18 வயது முதல் 23 வயதுவரை) எண்ணிக்கை சராசரி 25.2% என்று உள்ளது. இதை 2035ற்குள் 50% ஆக உயர்த்தப் போவதாக கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 25% ஆக இருக்கும் போதே 50,000 உயர்கல்வி நிலையங்கள் உள்ளன. 2035இல் 50% ஆக உயரும் போது 12,300 கல்லூரிகளாக இருக்குமாம். எவ்வளவு அறிவுப்பூர்வமான கொள்கை என்று பாருங்கள். தமிழ்நாட்டில் 2016-2017இல் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை கணக்கெடுப்பின்படி 46.9%உயர்கல்விக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். தற்போது கணக்கெடுத்தால் 49% ஆக கூட இருக்கலாம். நம்மை 2035 இல் 50% ற்கு கொண்டு வருவதாக கூறுகிறார்கள். நாங்கள் இப்போதே கிட்டத்தட்ட 50% இருக்கிறோம் நீங்கள் உங்கள் வடநாட்டிற்கு வேண்டுமானால் இந்தக் கல்விக் கொள்கையை வைத்துக்கொள்ளுங்கள்; எங்களுக்கு எதற்கு இந்தக் கல்விக் கொள்கை? ஆனாலும் நமக்கும் இந்த கல்விக் கொள்கை உண்டு என்கிறார்கள்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் இது பெரு முதலாளிகளுக்கான கல்விக் கொள்கை. மாநில உரிமைப் பட்டியலில் இருந்த கல்வி பொதுப் பட்டியலுக்குப் போனது; இப்போது மத்தியப் பட்டியலுக்கே முழுமையாகப் போக இருக்கிறது. அரசுக் கல்வி அளிக்கும் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டு தனியாரிடம் ஒப்படைக்கும் கொள்கையாகவும் உள்ளது. மொத்தத்தில் அதிகாரத்தை மத்தியில் குவிப்பது; வணிக மயமாக்குவது, காவி மயமாக்குவதாகவும் உள்ளது. Centralisation, Commercialisation, Communalisation என்ற அடிப்படையிலேயே இந்த தேசியக் கல்விக் கொள்கை உள்ளது.

பெரும் முதலாளிகள் இங்கே தொழிலை ஆரம்பிக்கிறார்கள் ஆனால் கூலிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை ஏனென்றால் எல்லாரும் படித்து விடுகிறார்கள். அதனால் கூலிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இதைத்தான் இந்தக் கொள்கை பூர்த்தி செய்யப் போகிறது. 3, 5, 8, 10, 12 ஆகிய வகுப்புகளில் பொதுத்தேர்வை மாணவர்கள் இடைநிற்றலை அதிகமாக்கி கூலிக்கு ஆட்களை அதிகமாக்கிக் கொடுக்கப் போகிறார்கள். 3ஆவது மாணவர்களுக்கே மண்பாண்டம் செய்தல், தச்சு வேலை சொல்லித் தரப் போகிறார்கள். பல பள்ளிக்கூடங்களை மூடி தூரமான இடத்து பள்ளியோடு இணைத்தால் பெண் குழந்தைகள் எப்படி படிக்கப் போவார்கள்? அதற்கு தீர்வாக Group walking போகச் சொல்லி அறிவுறுத்தப்படுகிறது. அதுமட்டுமல்ல பாதுகாவலரையும் அனுப்புவதாக குறிப்பிடப்படுகிறது. இவையெல்லாம் அறிக்கையில் கூறப்பட்டுள்ள யோசனைகள். இதனால் பெண்கள் கல்வி மறுக்கப்படும். கிராமப்புறத்தில் உள்ள, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான கல்வி மறுக்கப்படுகிறது. தற்போதுதான் முதல் தலைமுறையாக, இரண்டாம் தலைமுறையாக கல்வி பெற்று வருகிறோம் அதை மறுப்பதற்கான கல்விக் கொள்கையைத் தான் கொடுத்திருக்கிறார்கள். சென்னை மருத்துவக் கல்லூரியில், திறந்த போட்டிக்கு OC-200, BC-199.75, SC-199.50 மதிப்பெண்கள் தான் உள்ளது. என்ன குறைந்து போய் விட்டார்கள்? இது தகுதி இல்லையா? ஆனால் உயர்ஜாதி ஏழைகள் 10% ஒதுக்கீட்டுக்கு 28% மதிப்பெண் வாங்கியவர்களுக்கு வேலை கொடுத் திருக்கிறார்கள். இந்தக் கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் எதிர்த்தாக வேண்டும், தமிழ்நாட்டிற் காவது விலக்களிக்க வேண்டும் என்று எதிர்த்தாக வேண்டும் என்று தான் அய்ந்தாவது தீர்மானமாக' ஆரியர்களின் வேத காலத்திலிருந்தே - பெரும்பான்மையாக இருக்கும் மக்களான சூத்திர, பஞ்சம மக்களின் கல்வி உரிமைகள் பறிக்கப்பட்டு வந்துள்ளன. உரிமை மறுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான கல்வி அவர்களுக்கு தடையின்றி கிடைக்கவும், உயர்கல்வி நோக்கி செல்ல இலகுவான



**தேசியக் கல்விக் கொள்கையின் நோக்க உரையே பார்ப்பனிய மனுசாஸ்திரத்தை வெளிப்படுத்தி இருக்கிறது**

சூழலை உருவாக்கித் தரும் நோக்கத்தோடு சமூகநீதிக்கான கல்விக் கொள்கையை நாம் உருவாக்கி வைத்துள்ளோம். அதை முழுமையாக சிதைத்து, வெகு மக்களுக்கு கல்வி சென்றடைந்து விடக்கூடாது என்ற உள்நோக்கத்தோடு தடைகளை எழுப்பும் இந்த புதிய, தேசியக் கல்விக் கொள்கையை அமுல்படுத்த நடுவண் அரசு துடிக்கிறது.

தேசியக் கல்விக் கொள்கையின் நோக்க உரையிலேயே இது வெளிப்படையாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. சுதந்திரம் வழங்கப்பட்ட காலத்திலிருந்தே, எல்லோருக்குமான கல்வி, சமமான கல்வி என்று முயற்சித்தோமே தவிர அதைவிட முக்கியமான தரமான கல்வியைப் பற்றி கவலைப் படவே இல்லை' என்று அறிக்கையின் நோக்க உரை கவலைப்படுகிறது. வெளிப்படையாகவே, பார்ப்பனிய மனுசாஸ்திரத்தை வெளிப்படுத்தி யிருக்கிறது. 14 வயதுள்ள அனைவருக்குமான கல்வி உரிமைச் சட்டம் மனுசாஸ்திரத்திற்கு எதிராக வந்துவிட்ட நிலையில் அதன் நோக்கத்தை சிதைக்க புதிய கல்விக் கொள்கை பல்வேறு திட்டங்களை முன்வைத்துள்ளது. 5, 8 ஆகிய வகுப்பு மாணவர் களுக்கு பொதுத் தேர்வு என்பதன் வழியாக வடிகட்டுதல், உயர்கல்விக்கான வழிகளை தடுத்து நிறுத்துதல், வேதப் பெருமைகளை கல்வித் திட்டத்தில் இணைத்தல், போன்ற பார்ப்பன நச்சுக் கருத்துக்களை செயல்படுத்த வலியுறுத்துகிறது. மீண்டும் வேதகாலத்துக்கு இழுத்துச் செல்லும் இந்த கல்விக் கொள்கையை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. தமிழ்நாட்டில் கல்விப் புரட்சிக்கு வழிவகுத்த காமராசரின் நினைவு நாளான அக்டோபர் 2ஆம் நாள் புதிய கல்விக் கொள்கையின் ஆபத்துகளை விலக்கி, புதியக் கல்விக் கொள்கையின் நகல்களை கிழித்தெறியும் ஆர்ப்பாட்டத்தை இளைஞர்கள், மாணவர்களைத் திரட்டி நடத்துவது என்பதையும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

மண்ணின் மைந்தர்களுக்கு வேலை என்று நாம் கேட்கிறோம். நமது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 7.11.2016 அன்று ஒரு திருத்தத்தை கொண்டு வந்தார்கள். இப்படி சொல்வதை விட 'ஜெயலலிதா அப்போலோவில் இருந்த நேரத்தில்' ஒரு திருத்தத்தை கொண்டு வந்தார்கள். அந்த திருத்தம் என்னவென்றால்? யார் யாரெல்லாம் TNPSCஇல் விண்ணப்பிக்கலாம் என்பதே அந்த திருத்தம். அதில் 'இந்திய குடிமக்கள், அது யாராக இருந்தாலும் விண்ணப்பிக்கலாம். நேபாளம் அல்லது பூடான் குடிமக்களும் விண்ணப்பிக்கலாம். இந்தியாவில் நிரந்தரமாக குடியமரும் நோக்கத்துடன் திபெத்தி லிருந்து அகதிகளாக வந்தவர்களும் விண்ணப்பிக்க லாம்'. இந்தியாவில், 'பாகிஸ்தான், இலங்கை, பர்மா, வியட்நாம், கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கென்யா, உகாண்டா, அய்க்கிய குடியரசு, ஜாம்பியா, மாளவியா, சையர், எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் ஏதாவது ஒன்றிலிருந்து இந்தியாவில் நிரந்தரமாக குடியமரும் நோக்குடன் வந்தவர்கள் விண்ணப் பிக்கலாம். இவர்களெல்லாம் தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்பிற்கு விண்ணப்பிக்கலாம். போதுமான தமிழ் அறிவு இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் தேர்வு பெற்றால், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுக்குள் தமிழில் தேர்ச்சி பெற வேண்டும். இப்படி வரும் வடநாட்டவர்கள், வி.ஏ.ஓ, தாசில்தார்களாக நியமிக்கப்பட்டால் என்ன ஆகும்? தற்போது மே மாதத்தில் கூட தமிழ்நாடு மின் வாரியத்தில் 39 பிற மாநிலத்தவர்களைப் உதவிப் பொறியாளர்களாக நியமித்திருக்கிறார்கள். அதனால்தான் தமிழ்நாட்டு அரசிடம் இந்த திருத்தங்களை நீக்கம் செய்யுங்கள்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

குஜராத்தில் 2017இல் பாரத் பெட்ரோலியத்தில் 116 இடங்களில் வெறும் 16 இடங்கள் தான் குஜராத்தை சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதனால் மாணவர்கள் வழக்கு தொடுத்தார்கள் அந்த வழக்கில் குஜராத் அரசும் தன்னை இணைத்துக்கொண்டது. 1994லேயே 85 விழுக்காடு அரசு வேலைகளை குஜராத் மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவு உள்ளது அதன்படி 99 வேலைகள் கொடுக்கப்பட் டிருக்க வேண்டும் ஆனால் 16 இடங்கள் மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது தவறு என்று குஜராத் அரசு தானாக முன்வந்து மனு தாக்கல் செய்துள்ளது. அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடந்து கொண்டுள்ளது. நியமனத்தை நிறுத்தி வைத்துள்ளார்கள். குஜராத்தே இதை செய்திருக்கிறது. எனவே நீங்களும் இந்த விதிகளை மாற்றுவதோடு மண்ணின் மைந்தர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுக்க வேண்டும் என்று இந்த மாநாடு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது. இதை நிறைவேற்றச் செய்வது திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் கல்வி பெற்றுவந்து தங்களை இறுதி நாட்களில் தங்களை நல்லவண்ணம் வைத்திருப்பார்கள் என்று ஏங்கி நிற்கும் பெற்றோர்கள், தங்களுடைய பெரும் கனவாக அரசு வேலைக்குச் செல்லலாம் என்றிருக்கிற மாணவர்கள் ஆகிய அனைவரும் இணைந்து செய்ய வேண்டிய போராட்டமாக இருக்கப் போகிறது. அப்படிப்பட்ட போராட்டத்திற்கு அனைவரும் கலந்துகொண்டு வலுவான போராட்டமாக ஆக்க வேண்டும் என்றும் மற்றவர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் வேண்டுகோள் விடுத்து விடை பெறுகிறேன்.

**நிறைவு**

# குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக திருப்பூரில் ஆர்ப்பாட்டம்




திருப்பூரில் NRC மற்றும் CAA திருத்த சட்டங்களை திரும்ப பெற மத்திய மாநில அரசை வலியுறுத்தி 23.12.19 திங்கள் கிழமை தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக ஆர்ப்பாட்டம் மாநகராட்சி அலுவலகம் முன்பு மாலை 4 மணி அளவில் நடைபெற்றது. பிரசாந்த் (நகரச் செயலாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்) இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்று உரையாற்றினார். தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் கார்த்திகா, பவானி முன்னிலை வகித்தனர். தேன்மொழி (மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்), சம்சீர் அக்மத் (மாவட்டச் செயலாளர், இந்திய மாணவர் சங்கம்), முகமது சஹீத் (மாநில ஒருங்கிணைப்பாளர், ஜனநாயக மாணவர் பேரவை), அஸ்லாம் (தமிழக மக்கள் ஜனநாயக கட்சி) ஆகியோர் குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்தும் இந்தியா முழுவதும் போராட்டத்தில் மாணவர்கள் மீது நடத்திய வன்முறை தாக்குதலுக்கு எதிராக கண்டன உரையை பதிவு செய்தனர். திவிக மாநில பொருளாளர் சு.துரைசாமி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் திருவள்ளுவர் பேரவை அருண், திவிக தோழர்கள் ஐயப்பன், மணிகண்டன், சங்கீதா, திருப்பூர் மாநகரத் தலைவர் தனபால், மாநகர செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர் முத்து, வடக்கு மாவட்ட அமைப்பாளர் கருணாநிதி, தெற்கு மாவட்ட அமைப்பாளர் ராமசாமி மற்றும் மாணவர் கழகத் தோழர்கள் ஹரிஷ், தென்றல், கார்த்தி, கதிர்முகிலன், நஜ்முன்னிஷா மற்றும் பெரியார் பிஞ்சுகள் முத்தமிழ், ஈழமாறன், அமுதினி, யாழினி, யாழிசை ஆகியோர் பங்கேற்றனர். இறுதியாக கனல்மதி (நகர அமைப்பாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்) நன்றியுரை வழங்கினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழக ஏடுகளுக்கு சந்தாக்களை தோழர்கள் வழங்கினர்




கழக ஏடுகளான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ ஏடுகளுக்கு உறுப்பினர் பட்டியலுடன் சென்னை மாவட்டக் கழக சார்பில் ரூ.30,000/-த்தை கழகப் பொதுச் செயலாளரிடம் வடசென்னை மாவட்டக் கழகச் செயலாளர் ராஜி வழங்கினார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி கழக ஏடுகளின் சந்தாத் தொகையாக ரூ.20,000/- வழங்கினார்.

கோவை மாவட்டக் கழக சார்பில் நிர்மல் குமார் ரூ.23,900/- வழங்கினார்.

இணைய தள பொறுப்பாளர் விஜய்குமார் ரூ.12,000/- வழங்கினார்.

# கழக நாள்காட்டி வெளிவந்து விட்டது







செயலவையில் 2020 ஆம் ஆண்டுக்கான நாள் காட்டிகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. கழகத் தோழர்கள் நாள் காட்டிகளை வாங்கிச் சென்றனர். கழக ஏடுகளுக்கான உறுப்பினர்கள் சேர்க்கும் இரசீது புத்தகங்களையும் தோழர்கள் பெற்றுச் சென்றனர். இவ்வாண்டு நாள்காட்டியில் சமூகத்துக்குப் போராடிய பெண் போராளிகள் படம் இடம் பெற்றுள்ளன.

தொடர்புக்கு : தபசி குமரன், தலைமை நிலையச் செயலாளர். பேசி: 9941759641
நாள்காட்டி ஒன்றின் விலை : ரூ.70/-

**ஓவியர் பரதன் வடிவமைப்பில் உருவாகும் நாள்காட்டி:**

ஒவ்வொரு ஆண்டும் கழக நாள்காட்டியை இயக்க ஆதரவாளர் ஓவியர் பரதன் - எம்.எஸ். ஆப்செட் நிறுவனம் வழியாக அதற்கான படங்களை எந்த கட்டணமும் இன்றி சிறப்புடன் வடிவமைத்து தருகிறார். கழக சார்பில் அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அச்சத்தை உருவாக்குகிறது. ‘இந்துக்களை இராணுவ மயமாக்கு; இராணுவத்தை இந்து மயமாக்கு’ என்று ஏற்கனவே சங் பரிவார் முன் வைத்த முழக்கம் செயல்வடிவம் பெறத் தொடங்கிவிட்ட நிலையில் இந்த ஆபத்தை எதிர்கொள்ள மக்கள் ஒற்றுமையை விரும்பும் அனைத்து கட்சிகள், இயக்கங்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு மீண்டும் வேத - பார்ப்பன காலத்துக்கு இழுத்துச் செல்லும் பேராபத்தை முறியடிக்க தயாராக வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் அறைகூவல் விடுக்கிறது.

**தீர்மானம் : 2 :** அசாம் மாநிலத்தில் ரூ.1600 கோடி செலவு செய்து 19 இலட்சம் மக்கள் இந்தியக் குடிமக்கள் இல்லை என்று கண்டறிந்துள்ளது, பா.ஜ.க. ஆட்சி. அவர்களுக்கு தடுப்புக் காவல் முகாம்கள் என்ற பெயரில் நிரந்தர சிறைச் சாலைகளைக் கட்டுகிறார்கள். இதேபோல் ஒவ்வொரு மாநிலத்திலும் , மாநிலத்தில் குடியுரிமை பெறத் தகுதி இல்லாதவர்கள் பட்டியல்களைத் தயாரித்து மாநிலம் முழுதும் தடுப்புக் காவல் முகாம்களை கட்டப் போவதாக உள்துறை அமைச்சர் அமீத்ஷா அறிவித்தத்தைத் தொடர்ந்து நாடே இப்போது கொந்தளித்து நிற்கிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் இந்தியாவைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் என்ற மூன்று நாடுகளை இஸ்லாமிய மதத்தின் அடிப்படையில் மட்டும் தேர்வு செய்து அங்கிருந்து துன்புறுத்தலுக்கு உள்ளாகி, இந்தியாவுக்குள் ஊடுறுபவர்களுக்கு மதத்தின் அடிப்படையில் ‘குடியுரிமை’ வழங்கப்படும் என்று கூறுகிறது (இந்து, பார்சி, கிறிஸ்தவர், சீக்கியர், பவுத்தர், சமணர் என்ற பிரிவினருக்கு மட்டும்). இஸ்லாமியர்களாக இருந்தால் அவர்களுக்கு குடியுரிமை வழங்க முடியாது என்று மதத்தின் அடிப்படையிலேயே குடியுரிமையை மறுக்கிறது. அது மட்டுமன்றி இந்த மூன்று நாடுகளில் கடவுள் மத நம்பிக்கையில்லாத நாத்திகர்கள் துன்புறுத்தப்பட்டு அவர்கள் இந்தியா வுக்கு வந்தால் அவர்களுக்கும் குடியுரிமையை மறுக்கிறது இந்தச் சட்டம். சிங்கள பவுத்த கொடுங்கோல் ஆட்சியின் இராணுவக் கொடுமைக்கு அஞ்சி கடந்த 30 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் அகதிகளாக வாழும் ஈழத் தமிழர்களுக்கும் ‘குடியுரிமை’ வழங்க இந்த சட்டத்திருத்தம் மறுக்கிறது.

இந்த நிலையில் இந்த சட்டத்திருத்தத்தின் வழியாக இங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் நாத்திகர்கள், பகுத்தறிவாளர்கள், இஸ்லாமியர்கள் ‘நாட்டில் வாழத் தகுதியற்ற இரண்டாம் தர குடிமக்கள்’ என்ற பொதுக் கருத்தையே பார்ப்பனிய - பா.ஜ.க. ஆட்சி, பொதுப் புத்தியில் உருவாக்கி ‘தேச விரோதிகளைப் போல சித்தரிக்க முயற்சிக்கிறது.

வரலாற்றை மீள் ஆய்வு செய்தால் இந்த நாட்டுக்குள் நுழைந்தவர்கள் ஆரியர்களும், அந்த இனவழி வந்த பார்ப்பனர்களும்தான். அவர்கள் பூர்வீகக் குடிகளான சிந்து சமவெளி திராவிடர்களின் நாகரிகத்தை அழித்து தங்களை மேலாதிக்கவாதி களாக நிலை நாட்டி மக்களை சுரண்டிக் கொடுத்தனர். இதை ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

வரலாற்றில் வந்தேறிகளான ஆரிய வம்சத்தைச் சார்ந்த பார்ப்பனர்கள் இன்று வரை தங்கள் வேத புரோகித பண்பாட்டைக் காப்பாற்றிக் கொண்டு சமுதாயத்தில் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டே வாழ்கிறார்கள். வந்தேறிகளான இவர்களை வெளியேற்ற வேண்டும் என்று ஒரு கோரிக்கையை முன் வைப்பதற்கான வரலாற்று நியாயங்கள் இருந்தாலும்கூட ‘நாடு-சட்டம்-குடிமைச் சமூகம்’ என்று உருவானதற்குப் பிறகு சமூக ஒருமைப்பாடு, மாந்த நேய சமூக நாகரிகம், பொதுமைப் பண்பாடு காரணமாக அந்த முழக்கத்தை பொதுச் சமூகம் முன்னெடுக்கவில்லை. ஆனால், அத்தகைய விழுமியங்களைப் பற்றியோ, அரசியல் சட்டத்தின் நோக்கங்களைப் பற்றியோ சமூக ஒற்றுமை பற்றியோ கிஞ்சித்தும் கவலைப்படாத பார்ப்பனர்கள். மீண்டும் ஆரிய தேசத்தை உருவாக்க மதவெறுப்பு எனும் பாசிச பார்ப்பனி யத்தை அதிகாரத்தின் வழியாக திணிக்க முயல்கிறார்கள்.

அதுமட்டுமன்றி, இவர்களின் சமூகச் சுரண்டல்களை வேதகாலத்திலிருந்து கேள்விக்கு உட்படுத்திய புத்தர்கள், சார்வாகர்கள், சித்தர்கள் என்ற வரலாற்று மரபின் தொடர்ச்சியாக வந்த, புலே, அம்பேத்கர், பெரியார் போன்ற மத, ஜாதி, கடவுள் மறுப்பு சிந்தனையாளர்களையும் இரண்டாம் தரக் குடிமக்களாக்கத் துடிக்கிறார்கள். பெரியார் பேசிய நாத்திகம், வேத பார்ப்பனியம் சுமத்திய அடிமை விலங்கை ஒடிக்கும் விடுதலைக்கான மக்கள் முழக்கம், இந்த வரலாற்று உண்மையை பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு விளக்க வேண்டும். வந்தேறிகள் - சொந்த நாட்டு மக்களின் குடியுரிமையைத் தீர்மானிக்கும் உரிமை இல்லை என்பதை உரத்து முழங்க வேண்டும். பார்ப்பனியத்துக்கு பலிகடாவான மதப் பிரிவினர்களும் சமூக மாற்றத்தை விரும்பும் முற்போக்காளர்கள் அனைவரும் இந்த ஆபத்துகளை வரலாற்று வெளிச்சத்தில் முறியடிக்க முன் வரவேண்டும் என்றும் அதற்கான வலிமையான மக்கள் மேடைகளை உருவாக்கிட வேண்டும் என்றும் திராவிா விடுதலைக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

## நாமக்கல் மாவட்டத்தில் கட்டமைப்பு நிதி வழங்கியோர்

சேலம் மேட்டூரில் 2019 மே 25 ஆம் தேதி நடைபெற்ற நாத்திகர் பேரணி விழாவில் நாமக்கல் மாவட்டத்தின் சார்பில் ரூ 1,11,400 கட்டமைப்பு நிதி வழங்கப்பட்டது. அதில் குமாரபாளையம் பகுதியில் நிதி அளித்தவர்கள் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| குமாரபாளையம் மாதுராசு | ரூ.5000 | EB AD சீனிவாசன் | ரூ.1000 |
| ஆ.சுப்பிரமணி, கல்லிபாளையம் | ரூ.5000 | செல்வராஜ் | ரூ.2000 |
| மோகன் கிருட்டிணவேணி | ரூ.5000 | திராவிடமணி கௌதம் | ரூ.1000 |
| பா.செல்வராஜ் | ரூ.5000 | மோகன் | ரூ.1000 |
| T.சேகர், ஏஜென்சி பவானி | ரூ.5000 | காந்தகுரு மாதேஸ்வரன் | ரூ. 1000 |
| மு.சாமிநாதன் சந்திரா | ரூ.5000 | பிரைட் பிரகாஷ் | ரூ.500 |
| உதயம் ஆப்டிக்கல்ஸ் | ரூ.1500 | முருகாண்டி, வளையக்காரனூர் | ரூ.1000 |
| ஸ்ரீராம் கார்மென்ட்ஸ் | ரூ.2000 | குமரேஷ் நிமிலா | ரூ. 1000 |
| லோகேஸ் கங்கா | ரூ.1000 | மாதேஸ்வரன் | ரூ.1000 |
| மாயாவி, காளிப்பட்டி | ரூ.1000 | வடிவேல் நீலாவதி | ரூ.2000 |
| M.G நாத், பவானி | ரூ.1000 | **மொத்தம்** | ரூ. **50,000** |
| கௌதம், G L லூம்ஸ் | ரூ.2000 | | |

## அன்பு தனசேகர்–லதா இணையரின் 25ஆவது மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு நன்கொடை



கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர்-லதா இணையரின் 25ஆவது மணவிழா மகிழ்வு - சந்திப்பு - டிசம்பர் 11ஆம் தேதி தியாகராயர் நகர் சபரி உணவகத்தில் நடந்தது. கழகத் தோழர்கள், நண்பர்கள், குடும்பத்துடன் பங்கேற்று - அன்பு தனசேகரின் துடிப்பு மிக்க கொள்கை செயல்பாடு களையும் - துணைவியார் லதா, அனைத்து குடும்பப் பொறுப்புகளையேற்று செயல்பட்டு வருவதையும் பாராட்டினர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தோழர் அன்பு தனசேகர் பல ஆண்டுகாலமாக பெரியாரிய கொள்கைகளை பரப்புவதிலும் இயக்கச் செயல்பாடுகளிலும் தீவிரமாகப் பங்கேற்று செயல்படுவதை சுட்டிக்காட்டிப் பேசினார். அன்பு தனசேகர் -லதா, அன்பு மகள்கள் தமிழ்ச் செல்வி, இளவேனில் இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டின் வளர்ச்சிக்கு ரூ.10,000/- நன்கொடை வழங்கப் பட்டது.

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 2nd January 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN